# நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், கரூர்.

**முன்னிலை** : திரு. எஸ்.பி. பரத்குமார், எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்-1, கரூர்.

2026-ம் ஆண்டு ஜீலை மாதம் 16-ம் நாள் வியாழக்கிழமை

**சுருக்கு விசாரணை வழக்கு எண்.2680/2025**

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
தாந்தோணிமலை காவல் நிலையம்.
(குற்ற எண்.55/2025) .... குற்ற முறையிடுபவர்.

**.../ எதிர்/...**

கோகுல்நாத் (25),
த/பெ. கோவிந்தராஜ் .... எதிரி.

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 22.07.2025-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு வழக்கறிஞர்-நிலை-2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் எதிரி தாமாக முன்னிலையாகியும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து வந்து, இறுதியாக இன்று விசாரணைக்கு வரப்பட்டு, இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

1. கடந்த 19.02.2025ம் தேதி காலை 11.45 மணிக்கு தாந்தோணிமலை காவல்நிலைய சரகம் இவ்வழக்கின் வாதியான தினேஷ்குமார் என்பவர் சொந்த வேலையாக கரூர் சென்று விட்டு திரும்ப வீட்டிற்கு வருவதற்காக அவருக்கு சொந்தமான TN 47 AB 9353 என்ற எண்ணுள்ள Bajaj Pulsar இருசக்கர வாகனத்தில் கரூர் - திருச்சி ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி காந்திகிராமம் டபுள் டேங்க் அருகே சென்றபோது அதே ரோட்டில் அதே திசையில் வாதிக்கு முன்னால் சென்ற TN 56 R 7304 என்ற எண்ணுள்ள அசோக் லைலாண்ட் தோஸ்த் மினி வேனை இவ்வழக்கின் எதிரியான கோகுல்நாத் என்பவர் அதிகவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று எவ்வித சைகையும் காட்டாமல் திடீரென வலது பக்கம் திருப்பி வாதி தினேஷ்குமார் சென்ற இருசக்ககர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் வாதிக்கு இடது கால் முட்டிக்கு கீழ் கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாக தாந்தோணிமலை காவல் உதவி ஆய்வாளர் எதிரி மீது ச/பி.281, 125(b) BNS-ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்காவணங்களின் நகல்கள் யாவும் எதிரிக்கு பிரிவு 230 BNSS ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரி மீது ச/பி.ச/பி.281,

125(b) BNS-இன் கீழ் குற்றச்சாரம்சம் எடுத்துக் கூறி வினவிய போது எதிரி குற்றத்தை தன்னிச்சையாக ஒத்துக்கொண்டுள்ளார்.

3. எதிரியின் தன்னிச்சையான குற்ற ஒப்புதலைக் கருத்தில் கொண்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையிலும் எதிரி மீதான ச/பி.ச/பி.281, 125(b) BNS-இன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

4. முடிவில், எதிரியின் பதிலைக் கருத்தில் கொண்டு எதிரியின் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான ச/பி.ச/பி.281, 125(b) BNS-இன் கீழான குற்றமானது சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிருப்பிக்கப்பட்டுள்ளது என முடிவு செய்து எதிரிக்கு பிரிவு 281 BNS-ன் கீழான குற்றத்திற்கு அபராதம் ரூ.1000/- விதித்தும் மற்றும் பிரிவு 125(b) BNS-ன் கீழான குற்றத்திற்கு அபராதம் ரூ.10000/- விதித்தும் அபராதம் கட்டத்தவறினால் 1 மாதம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்து பிரிவு-264 BNSS ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. **மொத்த அபராதம் தொகை ரூ.11000/-.**

5. இவ்வழக்கில் சொத்து ஏதும் தாக்கல் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஜீலை மாதம் 16-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(sd)S.P. Barathkumar
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**